மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு டாக்டர் எம். மணிகண்டன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனிப்பட்ட ஒரு மனிதனுக்கு பிறப்பு முதல் இறப்பு வரை அரசால் வழங்கப்படக்கூடிய பல சேவைகள் வழங்கப்படும் என்கின்ற இந்த அறிவிப்பு, தொழில்நுட்ப வளர்ச்சியில் மக்களுக்கு அரசு புரியும் சேவையில் ஒரு புதிய மைல் கல் ஆகும். அதனைப் போன்று, அரசின் பரிவர்த்தனைகள் வெளிப்படையாகவும், அதேநேரத்தில் பாதுகாப்பாகவும் இருக்க வேண்டும் என்ற உயரிய நோக்கில், தமிழ்நாடு நம்பிக்கை இணையம்* Blockchain *என்ற செயலியினை அறிவித்து அரசின்மீது மக்களுக்கு மேலும் நம்பிக்கையூட்டும் வகையில், புரட்சிகரமான திட்டங்களைத் தந்த கொங்கு நாட்டு தவ சீலர், இரும்பு தேசத்து இமயவரம்பர் மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களுக்கு என் சார்பிலும், என் துறை சார்பிலும் கோடானுகோடி நன்றி மலர்களைக் காணிக்கையாக்குகிறேன்.* (மேசையைத் தட்டும் ஒலி)

6. கவன ஈர்ப்பு

மாவட்ட, மாநில அளவில் விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ, மாணவியருக்கு தமிழ்நாடு அரசு பொது நிறுவனங்களில் வேலைவாய்ப்பு வழங்குதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி அவர்கள், அரசின் கவனத்தை ஈர்த்து அமருங்கள்;* agenda*–ல் இருப்பதை அப்படியே படியுங்கள்.*

***திரு. அர. சக்கரபாணி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மாவட்ட, மாநில அளவில் விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ மாணவியருக்கு தமிழ்நாடு அரசு பொது நிறுவனங்களில் வேலைவாய்ப்பு வழங்க வேண்டிய அவசியம் குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த*

நிகழ்வினை மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

***மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது:

அறிக்கை

2018 ஆம் ஆண்டு சுதந்திர தின உரையின்போது மாண்புமிகு முதலமைச்சர், தகுதியின் அடிப்படையில் விளையாட்டு வீரர்களுக்கு அரசுத் துறைகள் மற்றும் பொதுத் துறை நிறுவனங்களில் கண்டறியப்பட்ட பணியிடங்களில் இடஒதுக்கீடு வழங்கப்படும் என அறிவித்தார். அதன்படி, அரசாணை (நிலை) எண் 6, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை, நாள் 20–2–2019–ல் அரசுத் துறைகளில் கண்டறியப்பட்ட பணியிடங்களுக்கான வேலைவாய்ப்பில் விளையாட்டு வீரர்களுக்கு 3% இடஒதுக்கீடு மற்றும் பொதுத் துறை நிறுவனங்களில் தலைசிறந்த விளையாட்டு வீரர்களை பணி நியமனம் செய்ய வழிவகைகள் குறித்து ஆணையிடப்பட்டுள்ளது.

2. இந்த அரசாணையின்படி விளையாட்டுத் துறையில் சாதனை புரிந்தவர்களுக்கு விளையாட்டு நிலையின் அடிப்படையில் வகை–1 பணியிடங்கள் பொதுத் துறை நிறுவனங்களிலும், வகை–2 பணியிடங்கள் அரசுத் துறை/பொதுத் துறை நிறுவனங்களிலும், வகை–3 மற்றும் வகை–4–ல் கண்டறியப்பட்ட பணியிடங்களில் அரசுத் துறைகளிலும் வேலைவாய்ப்பு வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

3. ஒலிம்பிக், பாராலிம்பிக் மற்றும் உலக சாம்பியன்ஷிப் போட்டிகளில் பதக்கம் வென்றவர்கள், காமன்வெல்த்/ஆசிய விளையட்டுப் போட்டிகள் மற்றும் ஆசிய பாரா விளையாட்டுப் போட்டிகளில் தங்கப் பதக்கம் வென்ற விளையாட்டு வீரர், வீராங்கனைகள், பொதுத் துறை நிறுவனங்கள் மற்றும் வாரியங்களில் வகை–1 பணியிடங்களில் வேலைவாய்ப்பு பெற தகுதியுள்ளவர்களாவர். காமன்வெல்த் போட்டிகள், ஆசிய போட்டிகள் மற்றும் ஆசிய பாரா விளையாட்டுப் போட்டிகளில் வெள்ளி/வெண்கலப் பதக்கம் வென்றவர்கள்; உலக சாம்பியன்ஷிப் போட்டிகள் (2 ஆண்டுகள்/1 ஆண்டு) IBSA

உலக விளையாட்டுகள், டெஃபாலிம்பிக்ஸ், ஆசிய/காமன்வெல்த் சாம்பியன்ஷிப் போட்டிகள் மற்றும் தெற்காசிய விளையாட்டுப் போட்டிகளில் பதக்கம் வென்றவர்கள் மற்றும் ஒலிம்பிக்/ காமன்வெல்த்/ஆசிய விளையாட்டுப் போட்டிகள் மற்றும் உலக சாம்பியன்ஷிப் போட்டிகள் (4 ஆண்டுகள்) ஆகியவற்றில் பங்கேற்ற வீரர், வீராங்கனைகள் பொதுத் துறை நிறுவனங்கள் மற்றும் வாரியங்களில் வகை–2 பணியிடங்களில் வேலைவாய்ப்பு பெற தகுதியுள்ளவர்களாவர்.

4. மேலும் இந்த அரசாணையில் குறிப்பிட்டுள்ளவாறு, தேசிய மற்றும் மாநில அளவிலான போட்டிகளில் பதக்கம் பெற்ற சிறந்த விளையாட்டு வீரர், வீராங்கனைகளுக்கு 3% விளையாட்டு இட ஒதுக்கீட்டின்கீழ் அரசுத் துறை நிறுவனங்களில் வேலைவாய்ப்பு வழங்கப்படும்.

5. பன்னாட்டு அளவிலான போட்டிகளில் பதக்கம் வென்ற 2 விளையாட்டு வீரர்கள் மற்றும் ஒரு விளையாட்டு வீராங்கனைக்கு மேற்படி அரசாணையின்படி பொதுத் துறை நிறுவனங்களில் வேலைவாய்ப்பு அரசால் வழங்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி அவர்கள்.

நண்பகல் 12-00

திரு. அர. சக்கரபாணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையை படித்துப் பார்த்தேன். அதிலே, பன்னாட்டு அளவிலான போட்டிகளில் பதக்கம் வென்ற 2 விளையாட்டு வீரர்கள் மற்றும் ஒரு விளையாட்டு வீராங்கனைக்கு பொதுத் துறை நிறுவனங்களில் வேலைவாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது என்றும், அரசுத் துறை நிறுவனங்களில் 3% இட ஒதுக்கீட்டில், அதாவது, தேசிய மற்றும் மாநில அளவிலான போட்டிகளில் வெற்றி பெற்ற வீரர், வீராங்கனைகளுக்கு வேலைவாய்ப்பு வழங்கப்படும் என்றும் தெரிவித்திருக்கிறார்கள். தற்போது, மத்திய அரசு, இரயில்வே துறை, வருமான வரித் துறை, சுரங்கத் துறை, தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள், துறைமுகங்கள், தபால் துறை, இரயில் பெட்டிகள் தயாரிக்கும் தொழிற்சாலைகள் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் விளையாட்டு வீரர்களை ஊக்குவிக்கும்வண்ணம், தேர்வுகள் இல்லாமல், திறமையின் அடிப்படையில் அவர்களைத் தேர்வு செய்து, அவர்களின் கல்வித் தகுதிக்கேற்ற அடிப்படையில் வேலைவாய்ப்பினை வழங்கி

வருகிறது. மத்திய அரசு பல ஆண்டு காலமாக வேலைவாய்ப்பினை உருவாக்கி வருகிறது; அதன்மூலம் பல்வேறு விளையாட்டு வீரர்கள் வேலைவாய்ப்பினைப் பெற்றிருக்கிறார்கள். கடந்த காலத்திலே நமது அரசு போக்குவரத்துத் துறையின் மூலமாகவும், தமிழ்நாடு மின்சார வாரியத்தின் மூலமாகவும் விளையாட்டு வீரர்களையெல்லாம் தேர்வு செய்தது. ஆனால், அது கடந்த பல ஆண்டுகளாக நிறுத்தப்பட்டிருக்கிறது. எனவே, நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்வது, பொதுத் துறை நிறுவனங்கள் எதுவாக இருந்தாலும், அதிலே பல்கலைக்கழக விளையாட்டு வீரர்கள், மாநில அளவிலே பங்குபெற்ற விளையாட்டு வீரர்கள், தேசிய அளவிலான விளையாட்டுப் போட்டிகளிலே பங்கு பெற்ற வீரர்களையெல்லாம் ஊக்குவிக்கும்வண்ணமாக இலாபம் தரக்கூடிய பொதுத் துறை நிறுவனங்களிலே வேலைவாய்ப்பை ஏற்படுத்தித் தருவதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதை அறிவதோடு, . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உங்களுக்கு இன்னும் ஒரு கேள்வி கேட்க வாய்ப்பு இருக்கிறது. இப்போது உட்காருங்கள். (குறுக்கீடு) உங்களுக்கு இன்னும் ஒரு கேள்வி கேட்க வாய்ப்பு இருக்கிறது.

திரு. அர. சக்கரபாணி: ஒரு நிமிடத்தில் சொல்லிவிடுகிறேன். பள்ளிகளிலே விளையாட்டை ஒரு கட்டாயப் பாடமாகக் கொண்டு வரவேண்டும். ஏனென்றால், வாரத்தின் 6 நாட்களில், 2 periods–ஐ மட்டும்தான் விளையாட்டுக்கென்று ஒதுக்குகிறார்கள். அதற்கு இன்னும் கூடுதலான நேரத்தை ஒதுக்கித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோன்று, NIS coach, இந்தியாவிலே, பாட்டியாலா, பெங்களூரு, கொல்கத்தா, காந்திநகர், திருவனந்தபுரம் ஆகிய நகரங்களில் உள்ளன. தமிழ்நாட்டில், அரசாங்கத்தின் சார்பில் இந்த NIS coach–ஐ எங்கும் நடத்தவில்லை. அதையும் தமிழ்நாட்டில் உருவாக்கித் தரவேண்டும். இன்றைக்கு விடுதிகள், தமிழ்நாட்டிலே. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சக்கரபாணி, நீங்கள் விவர அறிக்கையிலிருந்து ஒரு கேள்வி கேளுங்கள். நீங்கள் உரைபோல் நிகழ்த்தினால் நான் என்ன செய்ய முடியும்? (குறுக்கீடு) இல்லை, இல்லை. மாண்புமிகு அமைச்சர் விவர அறிக்கையைப் பேரவையில் வைத்திருக்கிறார். அது உங்கள் table–ல் உள்ளது. அதிலிருந்து இரண்டு கேள்விகளைத்தான் கேட்கலாம். நீங்கள் பெரிய உரை நிகழ்த்தினால் நான் என்ன செய்வது? (குறுக்கீடு)

2019 ஜூலை 12] *[பேரவைத் தலைவர்]*

இல்லை, இல்லை, உட்காருங்கள், மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) அடுத்த கேள்வி இருக்கிறது. அதில் பார்க்கலாம். மாண்புமிகு அமைச்சர் பதில் சொல்லுங்கள்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சென்னையிலே ஆரம்பித்து ஒட்டன்சத்திரம் வரையிலும் கேள்விகளை கேட்டுக்கொண்டே போகிறார். அத்தனைக்கும் ஒரே சமயத்தில் பதில் சொல்ல இயலாது. ஏனென்று சொன்னால், ஒரு கேள்விக்கு ஒரு பதில் சொல்லலாம். அவர் தொடர்ந்து 15 கேள்விகள் கேட்டிருக்கிறார்.*

மாண்புமிகு அம்மா அவர்கள் பொறுப்பிலே இருந்தபோதுதான் விளையாட்டுத் துறையிலே இருக்கின்ற வீரர், வீராங்கனைகளுக்கு ஊக்கத் தொகையை இரண்டு மடங்காக உயர்த்தி விளையாட்டுத் துறையில் வரலாற்றைப் படைத்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா அவர்களுக்குப் பிறகு, இன்றைக்குத் தமிழகத்தின் வரலாற்றில் விளையாட்டு வீரர்களுக்கு 3 சதவிகித இட ஒதுக்கீட்டை வழங்கி வரலாற்றைப் படைத்தவர் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் என்பதையும் நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) விளையாட்டு வீரர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்குவதில் ஒரு வரலாறு படைக்கப்பட்டிருக்கிறது. இதற்கு முன்னால் இப்படி இல்லை என்பதையும் நீங்கள் ஒப்புக்கொள்ள வேண்டும். ஆகவே, நாங்கள் பொறுப்பிலே இருந்தபோதுதான் அரசால் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. நீங்கள் மூன்று, நான்கு கேள்விகளை இங்கே கேட்டிருக்கிறீர்கள். ஒன்று, பொதுத் துறைகளிலும் விளையாட்டு வீரர், வீராங்கனைகளுக்கு வேலைவாய்ப்பைக் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். அதே நேரத்திலே, தனியார் நிறுவனங்கள், தொழிற்சாலைகளிலும்கூட இலாபம் ஈட்டும் தொழிற்சாலைகளில் வேலைவாய்ப்பு தரவேண்டுமென்ற ஒரு வேண்டுகோள் வைக்கப்பட்டிருக்கிறது. அதற்கும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எங்களுக்கு அறிவுரை வழங்கியிருக்கிறார்கள். மாண்புமிகு தொழில் துறை அமைச்சரோடு சேர்ந்து அந்தப் பணிகளையும் மேற்கொள்ளவிருக்கிறோம்.

அதுமட்டுமல்லாமல், பள்ளிக் கல்வித் துறையின் மூலமாகப் பள்ளிகளில் விளையாட்டுகள் வாரத்தில் 2 நாட்கள் மட்டும்தான்

நடைபெறுகிறது என்று குறிப்பிட்டீர்கள். நாள்தோறும் மாலை நேரங்களிலே விளையாட்டை விளையாடுவதற்காகத்தான் நம்முடைய மாண்புமிகு அம்மா அவர்கள் பெயரால் 'அம்மா இளைஞர் விளையாட்டுக் குழு' என்ற ஒரு குழுவை அமைத்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு வரலாற்றைப் படைத்திருக்கிறார்கள் என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இத்திட்டத்திற்காக 64.35 கோடி ரூபாய் ஒதுக்கப்படும். அப்படி ஒரு வரலாறு தமிழகத்திலே இன்றைக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்பதை நான் இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சக்கரபாணி, சுருக்கமாகக் கேளுங்கள்.

திரு. அர. சக்கரபாணி: கேள்வியே கேட்க விடமாட்டேன் என்கிறீர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கிட்டத்தட்ட 7 கேள்விகளுக்குமேல் கேட்டுவிட்டீர்கள்.

திரு. அர. சக்கரபாணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விளையாட்டு வீரர்களுக்கு 3 சதவிகித ஒதுக்கீடு என்பதை இன்னும் கூடுதலாக, 10 சதவிகித ஒதுக்கீடாக உயர்த்தி, அனைத்து துறைகளிலும் அரசு வழங்குகின்ற வேலைவாய்ப்பிலே பல்கலைக்கழக விளையாட்டு வீரர்கள், மாநில அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் பங்குபெறும் விளையாட்டு வீரர்கள், தேசிய அளவிலான விளையாட்டுப் போட்டிகளிலே பங்கு பெறுகின்ற விளையாட்டு வீரர்களுக்கெல்லாம் வேலைவாய்ப்பை வழங்குவதற்கு முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு முதலமைச்சர் கோப்பைக்கான விளையாட்டுப் போட்டி ஆண்டுதோறும் நடைபெறுகிறது. மாநில Championship போட்டி ஒவ்வொரு விளையாட்டிலும் நடைபெறுகிறது. மாவட்ட அளவிலே ஒவ்வொரு அணியும் வெற்றி பெற்று, மாநில அளவிலே வெற்றி பெற்று, தேசிய அளவிலே அவர்கள் விளையாடச் செல்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் வெறும் சான்றிதழ் மட்டும்தான் வழங்கப்படுகிறது. முதலமைச்சர் கோப்பைக்கான போட்டியில் வெற்றி பெறுகின்ற வீரர்கள் ஒவ்வொருவருக்கும் ஒரு இலட்சம் ரூபாய் பணம் பரிசாகத் தரப்படுகிறது. ஆனால்,

2019 ஜூலை 12] [திரு. அர. சக்கரபாணி]

State Championship போட்டியில் வென்று, தேசிய அளவில் விளையாடுகின்ற விளையாட்டு வீரர்களுக்கு வெறும் சான்றிதழ் மட்டும்தான் வழங்கப்படுகிறது. அவர்களுக்கும் பரிசுத் தொகை கொடுத்து, ஊக்குவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அரசுப் பள்ளிகளிலே இப்போது பார்த்தீர்களென்றால், நிறைய விளையாட்டுகள் இருக்கின்றன. இதற்கு முன்பு அவர்கள் விளையாட்டுப் போட்டிகளில் கலந்துகொள்ளச் செல்கிறார்களென்றால், அதற்கான செலவினை எதிர்கொள்வதற்கென்று ஒரு நிதி இருந்தது. இப்போது பொது நிதி வந்துவிட்டது. அதனால் தலைமையாசிரியர்கள், விளையாட்டுப் போட்டிகளில் கலந்துகொள்ளச் செல்கின்ற மாணவர்களுக்கு பேருந்துக் கட்டணத்திற்கோ அல்லது உணவுக் கட்டணத்திற்கோ பணம் கொடுப்பதில்லை. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதற்கென்று சிறப்பு நிதியை ஒதுக்கி, அதை ஏற்படுத்தித் தர வேண்டும்.

பிற்பகல் 12–05

இன்றைக்கு விளையாட்டுத் திடல் அமைத்துத் தரப்படுவதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்புத் திட்டத்தில், தமிழ்நாட்டில் இருக்கின்ற 12,524 ஊராட்சிகளிலும், 528 பேரூராட்சிகளிலும் விளையாட்டுத் திடல்களை அமைப்பதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விதி 110–ன்கீழ் ஓர் அறிவிப்பை வெளியிட்டார்கள். நான் இந்த அரசைக் கேட்டுக்கொள்வது, இப்போதிருக்கின்ற அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களும் ஊருக்குச் சென்றால், அங்குள்ள விளையாட்டு வீரர்கள் அனைவரும் எங்களிடம் என்ன கேட்கிறார்கள் என்றால், விளையாடுவதற்கு இடம்–play ground வேண்டுமென்றுதான் கேட்கிறார்கள். ஏனென்றால், அங்கு முழுவதும் விவசாய நிலமாகிவிட்டது. விளையாடுவதற்கு, களம் அமைக்க வேண்டுமென்றால் இடமில்லை. Basketball, volleyball, football, கபடி, cricket என்று விளையாட்டுகள் இருக்கின்றன. நாம் எங்கு சென்று விளையாடுவது? விளையாடுவதற்கு இடமே இல்லை. அதனால்தான் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் தெரிவித்துக்கொள்கிறேன். இது பொதுவான கருத்து. விளையாட்டிற்கு இடம் என்பதே கிராமத்தில் இல்லை. அதனால், வருவாய்த் துறைக்குச் சொந்தமான இடமாக இருந்தாலும் சரி அல்லது இந்து சமய அறநிலையத் துறைக்குச் சொந்தமான இடமாக

இருந்தாலும் சரி, இல்லாவிட்டால் அரசு சிறப்பு நிதியை ஒதுக்கி, தனியாரிடத்திலே பேச்சு வார்த்தை நடத்தி, பிர்கா அளவிலே ஒரு குறு வட்டம், பஞ்சாயத்து அளவிலேகூட வேண்டாம், ஒரு குறு வட்ட அளவிலே நீங்கள் 5 ஏக்கர், 10 ஏக்கர் நிலத்தைத் தேர்வு செய்யலாம். CSR நிதியிலிருந்து, நிறைய தொழிற்சாலைகள், சமூக ஆர்வலர்கள் என பணம் தருவதற்கு நிறைய பேர் இருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சக்கரபாணி, இந்தச் சபையை நடத்துவதற்கு, நான் மற்ற விவரங்களுக்கு செல்வதா, இல்லை உங்கள் கேள்வியோடு நான் விட்டுவிடுவதா? (குறுக்கீடு) இல்லை, முக்கியம்தான். நீங்கள் கவன ஈர்ப்பிலே, இரண்டு கேள்விகள் கேட்கலாம். உங்களுக்கு கொடுத்திருக்கின்ற அறிக்கையிலேயிருந்துதான் கேட்க வேண்டுமேயொழிய உங்களுடைய சொந்தமாக (குறுக்கீடு) இல்லை.

திரு. அர. சக்கரபாணி: விளையாட்டை பற்றித்தான் கேட்கிறேன். வேறு எதிலிருந்தும் கேட்கவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சரி, நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு) இருங்கள், உட்காருங்கள். அவர் சௌகரியமாகப் பேசட்டும்.

திரு. அர. சக்கரபாணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, CSR நிதியிலிருந்து, சமூக ஆர்வலரிடத்திலிருந்து நிதி வாங்கி, உபகரணங்கள், அந்த விளையாட்டிற்குத் தேவையான கட்டுமானப் பணிகளைச் செய்து, விளையாட்டு வீரர்களை ஊக்குவிக்கும் வண்ணமாக வருங்காலத்திலே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதை உருவாக்குவார்களா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், ஒரு கேள்வி அல்ல, பல கேள்விகளைக் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். இவர் சிறப்புரை போன்று பேசிக்கொண்டிருக்கிறார். ஆகவே, அவருக்கு விளக்கம் சொல்கின்றவகையில், விளையாட்டை ஊக்குவிப்பதற்காகத்தான் இந்த அரசு, நம்முடைய மாண்புமிகு

முதல்வர் அவர்கள், இதற்காக அம்மா அவர்களுடைய பெயரால், அம்மா இளைஞர் விளையாட்டுத் திட்டத்தின்கீழ் 'அம்மா இளைஞர் விளையாட்டுக் குழு' அமைக்கப்படும்; இத்திட்டத்திற்காக 64.35 கோடி ரூபாய் ஒதுக்கப்படும் என்று அறிவித்தார்கள். பள்ளிகளில் இருக்கின்ற விளையாட்டு இடங்களைத் தூய்மைப்படுத்துவதற்காகவும், அதேநேரத்தில் மாலை நேரங்களிலே அனைவரும் விளையாட்டிலே கலந்து கொள்வதற்காகவும், பள்ளி இல்லாத காலை நேரங்களில் மற்றவர்கள் அங்கே தங்கள் நடைப்பயிற்சிகளை மேற்கொள்வதற்காகவும் அரசு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. நம்முடைய பள்ளிகளிலே எவ்வளவு இடங்கள் இருக்கின்றன என்பதை நாங்கள் ஆய்வு செய்து, 267 பள்ளிகளில், ஏறத்தாழ 5 ஏக்கருக்கு மேலே இருக்கின்ற நிலங்கள் அத்தனையையும் விளையாட்டிற்காகவே ஒதுக்குவதற்கு இந்த அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறது. நீங்கள் தவற விட்ட பணிகளை, நாங்கள் இப்போது தவறாமல் செய்து, விளையாட்டுத் துறையிலே வரலாற்றை படைத்துக் கொண்டிருக்கின்றோம். (மேசையைத் தட்டும் ஒலி)

3 சதவிகித இட ஒதுக்கீடு என்பதே ஒரு வரலாறு. (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், அதற்கு மேலே நீங்கள் உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்பதுதான் எங்களுக்கு வேதனையாக இருக்கிறது. நீங்கள் zero-விலிருந்தீர்கள், இன்று நாங்கள் 3 சதவிகிதம் உயர்த்தியிருக்கிறோம். அதையே நீங்கள் பாராட்டியிருக்க வேண்டும். ஆனால், அதேநேரத்தில் பொதுத் துறை நிறுவனங்களோடும் நாங்கள் கலந்து பேசியிருக்கிறோம். அங்கும் வேலைவாய்ப்பை எப்படிக் கொடுக்க முடியும் என்பது குறித்தும் நாங்கள் ஆய்வு செய்து கொண்டிருக்கின்றோம். அதேநேரத்தில், எங்கெங்கே விளையாட்டு மைதானங்கள் இல்லையோ, அந்த இடத்தில் அரசு நிலங்கள் இருக்குமேயானால் அந்த நிலத்தைத் தூய்மைப்படுத்தி, விளையாட்டரங்கங்களை அமைப்பதற்கும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். ஆகவே, வருவாய்த் துறையோடு நாங்களும் கலந்து பேசி, உள்ளாட்சித் துறையின்கீழ் இருக்கின்ற இடங்களாக இருந்தாலும், பயன்படுத்தக்கூடிய இடங்களை, இளைஞர்களுக்காக விளையாட்டுத் துறையின் மூலமாக ஆய்வு செய்வதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 3 துறைகளையும் அழைத்து பேசப் போகிறார்கள். ஆகவே, அந்தப் பணிகள் அனைத்தையும் நாங்கள்

நிறைவேற்றி, ஒரு வரலாற்றை தமிழகத்திலே இளைஞர்களுக்காக உருவாக்கவிருக்கிறோம் என்பதையும் நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதோடுமட்டுமல்ல, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் கோப்பைக்கான விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்பவர்களின் வயதுவரம்பு 21–லிருந்து 25 ஆக உயர்த்தப்பட வேண்டுமென்று நீங்கள் கோரிக்கை வைத்தவுடன், மின்னல் வேகத்திலே அந்த உத்தரவை எனக்கு வழங்கினார்கள். ஆக, அப்படிப்பட்ட வரலாற்றைப் படைத்துக் கொண்டிருக்கின்ற முதலமைச்சர் இருக்கின்றபோது உங்கள் கனவுகள் அனைத்தும் நிறைவேற்றப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விளையாட்டைப் பொறுத்தளவிற்கு இன்றைக்கு நகரங்களிலே stadium, play grounds எல்லாம் இருக்கின்றன. நம்முடைய மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் சொன்னதுபோல, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், நீங்கள் இப்பொழுது இந்தக் கேள்வியைக் கேட்பதற்கு ஒரு வாரத்திற்கு முன்பாக, அவசரமாக எங்கள் department–ல் இருப்பவர்களையெல்லாம் அழைத்து ஒரு கூட்டத்தை நடத்தினார்கள். கிராமங்களில் இருக்கின்ற இளைஞர்களுக்கு பல்வேறு திறமைகள் இருக்கின்றன. அவர்களுக்கு எல்லா kits–ஐயும் வாங்கித் தர வேண்டும். Cricket kit, volleyball kit, football kit போன்ற அனைத்தையும் வாங்கிக் கொடுத்து, அவர்களுக்குத் தேவையான விளையாட்டு மைதானத்தை 100 நாள் வேலைவாய்ப்பு திட்டத்தில் அமைக்கவும் ஆணையிட்டுள்ளார்கள். எல்லா கிராமங்களுக்கும், இளைஞர்களுக்கும் இன்றைக்குத் தேவையான பொருட்களை வாங்கிக் கொடுத்து, அந்தக் grounds–ஐ எல்லாம் சுத்தப்படுத்த சொல்லியிருக்கிறார்கள். இந்தத் திட்டத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விதி 110–ன்கீழ் அறிவித்திருக்கிறார்கள். மாண்புமிகு அம்மா அவர்களுடைய பெயரிலே அந்தக் குழு ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. கண்டிப்பாக,

சிறப்பான முறையிலே அது நடைபெறும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 12–10

7. மானியக் கோரிக்கைகள், 2019–2020, விவாதமும் வாக்கெடுப்பும்–*தொடர்ச்சி*

(அ) கோரிக்கை எண் 17–கைத்தறி மற்றும் துணிநூல் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை)

(ஆ) கோரிக்கை எண் 18–கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப்பொருட்கள் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை)

(அ) கோரிக்கை எண் 17–கைத்தறி மற்றும் துணிநூல் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2019–2020 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகளின்மீது விவாதமும், வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 17–கைத்தறி மற்றும் துணிநூல் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை), மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

“கைத்தறி மற்றும் துணிநூல் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை) பற்றிய 17 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.1,169,55,58,000/–, மூலதனக் கணக்கில் ரூ.1,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.1,00,07,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்”

எனக் கோருகிறேன்.